# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2065 - 2018 මාර්තු මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.03.29

*2065 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 584 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 631 |


**கவனிக்க**: தேசிய கணக்காய்வு சட்டமூலம் 2018, மாச்சு மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


581 - B 81267 -5403 (2018/ 03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு

### வணிகக் கப்பற்துறை செயலகம்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் வணிகக் கப்பற்துறை செயலகத்தில் பின்வரும் பதவிகளுக்கு தகைமை பெற்ற இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| பதவிப் பெயர் | ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் | பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| உதவி அரசாங்க கப்பல்கள் அளவையாளர் (பொறியியல்) | தரம் II | 1 |
| உதவி அரசாங்க கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்) | தரம் II | 1 |

*1.* **தகைமைகளும் அனுபவமும்**:

(i) கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள்:

| பதவி | கல்வித் தகைமைகள் | தொழில் தகைமைகள் | அனுபவம் |
|---|---|---|---|
| உதவி அரச கப்பல்கள் அளவையாளர் (பொறியியல்) | சமுத்திர இயந்திர காவலர் பொறுப்பு உத்தியோகத்தர் (வரையறுக்கப்படாத) சான்றிதழ் பெற்றிருத்தல் | ஏற்புடையதாகாது | 3000 கிலோவோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் இயந்திர காவலராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல் |
| உதவி அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்) | கப்பற்தள காவலர் பொறுப்பு உத்தியோகத்தர் (வரையறுக்கப்படாத) சான்றிதழ் | ஏற்புடையதாகாது | 3000 கிலோவோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் கப்பத்தள காவலராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல் |

*2.* **உடற்தகுதி**.- அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

*3.* **பிறதகைமைகள்**:

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இவ்வாறு அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*4.* **வயதெல்லை**.- 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ( ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது)

5. **சம்பள அளவுத் திட்டம்**.- ரூபா 34,605 - 10× 660 - 11×755- 15×930 - ரூபா 63,460 (2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் உரித்தாகும்.)

6. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் புள்ளி நடவடிக்கை முறைக்கு அமைவாக புள்ளிகள் வழங்கப்படும் :

| பரிசீலனை செய்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| 2. தொழிற்தகைமைகள் | 25 |
| 3. மேலதிக அனுபவம் (ஆட்சேர்ப்பின்போது பரிசீலனை செய்யப்படும் அனுபவத்திற்கு மேலதிகமாக) | 20 |
| 4. ஆங்கில மொழித் தேர்ச்சி | 10 |
| 5. கணினி அறிவு | 10 |
| 6. நேர்முகப்பரீட்சை | 05 |
| | 100 |

இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை**.-

(i) இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை செயலகம், இலக்கம் 43-89, பிறிஸ்ரல் கட்டிடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 01" என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் அபேட்சகரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் ஆணைப்பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 32,807 ரூபா மாதாந்த அடிப்படைச் சம்பளமொன்றைப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர் அவர்களுடைய விண்ணப்பங்களை இயைபுள்ள திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது வித்தியாசம் ஏற்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

வணிகக் கப்பற்துறை பணிப்பாளர்
அதிபதி,
வணிகக் கப்பற்துறை செயலகம்,
துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு.

1 ஆம் மாடி, பிறிஸ்டல் கட்டிடம்,
43-89, யோர்க் வீதி,
கொழும்பு 1.
2018, மாச்சு 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வணிகக் கப்பற்துறை செயலகம்**

உதவி அரச கப்பல்கள் அளவையாளர் ( பொறியியல்) / ( கப்பல் தளம்) பதவி

(அலுவலக உபயோகத்திற்கு)

1. விண்ணப்பதாரியின் பெயர்:
   (i) முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
   (ii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. முகவரியும் தொலைபேசி இலக்கமும்:
   (i) அலுவலக முகவரி:----.
   தொலைபேசி இலக்கம் :----.

   (ii) சொந்த முகவரி:----.
   தொலைபேசி இலக்கம் :----.
   செல்லிட தொலைபேசி இலக்கம் ----.

3. பிறந்த திகதி :

   ஆண்டு : | | | | |  மாதம் : | | |  திகதி : | | |

4. விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் திகதின்றுக்கான வயது :

   வருடங்கள் : | | |  மாதங்கள் : | | |  நாட்கள் : | | |

5. தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் : | | | | | | | | | | |

6. பால் :----.

7. திருமணமானவரா/ திருமணமாகாதவரா/ விதவையா என்பது பற்றி :----.

8. கல்வித் தகைமைகள் மற்றும் மேலதிக கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் நிழற்பட பிரதிகளை இணைக்குக).

| தகைமைகள் | தகைமைகள் பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் | பிற |
|---|---|---|---|---|---|
| | | | | | |

9. தொழில் தகைமைகள் :

| தகைமைகள் | தகைமைகள் பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | இந்தப் பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக | சேவைக்காலம் |
|---|---|---|---|
| | | | |

11. ஆங்கிலம் அல்லது சிங்களம்/ தமிழ் மொழிக்காக பெற்றுள்ள கல்வித் தகைமைகள் மொழி தொடர்பிலான தேர்ச்சி:

.......................................

12. கணினி தொடர்பிலான தேர்ச்சி :

   (அ) பட்டம் :----.

   (ஆ) டிப்ளோமா :----.

   (இ) சான்றிதழ் பாடநெறி :----.

13. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக நீதிமன்றத்தினால் குற்றிவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிக்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நியமனம் வழங்க முன்னர் தெரிய வந்தால் எனது அபேட்சகத் தன்மை இல்லாதொழியுமெனவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்தத்தவறு தெரியவந்தால் இதற்குரியதான நடவடிக்கைகளுக்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும், அவர் 2018,................................ ஆந் திகதி என் முன்னிலையில் தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

15. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்):

இந்த அமைச்சில் / திணைக்களத்தில்/ நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ................................... தற்போது .................... பதவியில் கடமையாற்றுகிறாரெனவும் அவருடைய வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும் ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லையெனவும் அது பற்றி நடவடிக்கை எடுப்பதற்குக் கருதவில்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/ விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்.

திகதி :----.

3-1258

---

## துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு

வணிகக் கப்பற்துறை செயலகம்

### பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) பதவி

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் வணிகக் கப்பற்துறை செயலகத்தில் மேற்போந்த பதவிகளை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் கோரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.வெற்றிட எண்ணிக்கை பின்வருமாறாகும்:-

| பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| 1. பரீட்சைப் பரிசோதகர் ( பொறியியல்) | 02 |

*01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.-* இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைகுழுவினால் அங்கீகரிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை முடிவின் மீது ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் அபேட்சகர்களைக் கொண்டு வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ( இந்த அறிவித்தலின் 06 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறைக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவையானதகைமைகள்**:

(i) ***கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள்.-***

| பதவி | கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|---|
| பரீட்சைப் பரிசோதகர் (பொறியியல்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது சீனா அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசி லாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்துறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பிரதான பொறியியலாளர் தேர்ச்சி சான்றிதழைப் பெற்றிருத்தல் | 3000 கிலோவோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் பிரதான பொறியியலாளராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல் |

***(ii) உடற்தகுதி*** : அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

***(iii) பிற தகைமைகள்:***

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்**:

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்படல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 3 வருடங்களைக் கொண்ட தகுதிகூர் நிலைக்கு உட்படுத்தப்படும் . இந்த பதவிகளுக்காக I ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஐந்து (05) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதியிடப்பட்டதும் 01/2014 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக பதவியில் இணைந்து ஐந்து (05) வருட காலத்திற்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியினைப்பெற வேண்டுமென்பதோடு அரச கருமமொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் தகுதிகூர் காலப்பகுதிக்குள் உரிய அரச கருமமொழி தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை அரசாங்கத்தின் நிதி நியதி உட்பட பிற திணைக்கள கட்டளைகளுக்கும் இந்த நியாயமானது கட்டுப்படும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ( ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது)

5. **சம்பள அளவுத் திட்டம்.** - இந்தப் பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 ரூபா 1,10,895 கொண்ட மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரியதாவதோடு,இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 20 ஆம் படிநிலையில் அமர்த்தி (ரூபா 76,175) சம்பளம் வழங்கப்படும். (2006.04.25 ஆந் திகதியிடப்பட்டதும் 6/2006 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக SL -1-2006 சம்பள அளவுத் திட்டம்) இதற்கு மேலதிகமாக 80,000 ரூபாவைக் கொண்ட தொழிற்படியொன்று, போக்குவரத்து வசதிகளும் உரித்துடையதாகும். (2016.02.25 ஆந் திகதி 03/2016 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் உரித்தாகும்.).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி நடவடிக்கை முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்:-

| பரிசீலனை செய்து வழங்கப்படும் தலைப்புக்கள் | | | | ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| | | விடயம் | புள்ளிகள் | |
| | | பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) | | |
| 01. | **மேலதிகக் கல்வித் தகைமைகள் :** | | | **30** |
| | (அ) | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல், விஞ்ஞானம், வணிகம், முகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் கொள்வனவு முகாமைத்துவம் அல்லது கப்பற்துறை போன்ற துறைகளுக்குரியதான பட்டப்பின் படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் | (30 புள்ளிகள்) | |
| | (ஆ) | மேற்குறிப்பிட்ட துறைகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | (20 புள்ளிகள்) | |
| | (இ) | மேற்குறிப்பிட்ட துறைகளின் கீழ்<br>முதலாவது வகுப்பு பட்டம்<br>இரண்டாவது வகுப்பு பட்டம் உயர் மட்டம்<br>இரண்டாவது வகுப்பு கீழ் மட்டம்<br>(உச்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்) | <br>(18 புள்ளிகள்)<br>(25 புள்ளிகள்)<br>(12 புள்ளிகள்) | |
| 02. | **கல்வித் தகைமைகள்** | | | **10** |
| | | பதவிக்குரிய துறையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், | | |
| | (அ) | ஒரு வருடத்துக்கான டிப்ளோமா பாடநெறியொன்றைப் கற்று அதனை நிறைவு செய்து சான்றிதழை பெற்றிருத்தல் ( மேலதிகக் கல்வித் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படாத தகைமைகளுக்காக மாத்திரம் | (10 புள்ளிகள்) | |
| | (ஆ) | ஆறு மாத காலத்துக்கான பாடநெறியொன்றைப் கற்று அதனை நிறைவு செய்து சான்றிதழை பெற்றிருத்தல் ( மேலதிகக் கல்வித் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படாத தகைமைகளுக்காக மாத்திரம் | (05 புள்ளிகள்) | |
| **03.** | மேலதிக அனுபவம் | | | **30** |
| | | ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகளின் கீழ் குறிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்திற்கு மேலான அனுபவம் பெற்றுள்ள காலப்பகுதிக்கு (ஆண்டொன்றிற்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக ஆறு (06) வருடங்களுக்கு. | | |
| 04. | **துறைசார்ந்த பங்களிப்பு (வெளியீடுகளும் புதிய கண்டுபிடிப்புகளும் :** | | | **10** |
| 05. | **கணினி ஆற்றல் ( ஆகக் கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் :** | | | **15** |
| | (அ) | பட்டம் /பட்டப்படிப்பில் பாடமொன்றாக கணினி தகவல் தொழில்நுட்பம் பாடத்தில் சித்தியடைந்திருத்தல | (15 புள்ளிகள்) | |
| | (ஆ) | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கணினி தொடர்பான ஒரு வருட அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான டிப்ளோமா /சான்றிதழ் | (12 புள்ளிகள்) | |

| பரிசீலனை செய்து வழங்கப்படும் தலைப்புக்கள் | | | | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| | விடயம் | | புள்ளிகள் | |
| | (இ) | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணினி தொடர்பான ஆறு மாத அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான டிப்ளோமா /சான்றிதழ் | (10 புள்ளிகள்) | |
| | (ஈ) | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணினி தொடர்பான டிப்ளோமா /சான்றிதழ் (உச்ச தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | (08 புள்ளிகள்) | |
| 05. | **நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமை** | | | **5** |
| | | **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

**07. அபேட்சகரின் ஆள் அடையாளம்:**

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது சகல வித்திலும் பூரணமான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அபேட்சகர்கள் மாத்திரமாவர்.

(ii) நோமுகப் பரீட்சையில் சகல சான்றிதழிகளினதும் மூலப்பிரதிகளையும் உரிய வித்தில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) நேர்முகப்பரீட்சையில் தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பின்வரும் ஆள் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**08. விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்கள் 2018.05.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "வணிகக்கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை செயலகம், இலக்கம் 43/89, பிறிஸ்ரல் கட்டிடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 01" என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று அந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது . விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து 1 ஆம் பக்கத்தில் இலக்கம் 1 இலிருந்து 07 வரையும் 2 ஆம் பக்கத்தில் 08 இலிருந்து 12 வரையும் 3 ஆம் பக்கத்தில் 13 இலிருந்து 15வரையும் அமையும் விதத்தில் தயாரிக்கப்பட்டு சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பரீட்சை பரிசோதகர் ( பொறியியல்), பதவிக்கு விண்ணப்பித்தல் " எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் .

(iv) விண்ணப்பப்படிவத்தில் அபேட்சகரின் ஒப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதானநீதிவான்/ சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 32, 807 ரூபா மாதாந்த அடிப்படைச் சம்பளமொன்றைப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை தாங்கள் சேவை செய்யும் திணக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல்போதல் மற்றும் தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப் படமாட்டாது.

**09. பிழையான தகவல்களை முன்வைத்தல்:**

தங்கள் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் எவையும் உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நியமனம் வழங்க முன்னர் தெரியவந்தால் தங்களுடைய அபேட்சகத்தன்மை இல்லாதொழியும்.

அத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரிய வந்தால் இதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்யப்படுவற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10.வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

எல்.பீ. ஜயம்பதி,
செயலாளர்,
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 1,
2018, மாச்சு 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்துக்கு)
)

**துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு**

வணிகக் கப்பற்துறை செயலகம்

**பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) போன்ற நிறைவேற்று சேவை வகுதியின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகள்**

01. விண்ணப்பதாரியின் பெயர்:
(i) முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :
(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) சொந்த முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
செல்லிடத் தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றுக்கான வயது-

வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் :----.

7. திருமணமானவரா/ திருமணமாகாதவரா/ விதவையா என்பது பற்றி : ----.

8. கல்வித் தகைமைகள் :

| தகைமைகள் | தகைமை பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் | பிற |
|---|---|---|---|---|---|
| | | | | | |

09. **தொழில் தகைமைகள் :**

| தகைமைகள் | தகைமை பெற்ற வருடம் | பாட விதானம் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. **அனுபவம் தொடர்பான விபரங்கள் :**

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | இந்தப்பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக | சேவைக்காலம் |
|---|---|---|---|
| | | | |

11. துறைசார்ந்த பங்களிப்பு :----.
(வெளியீடுகளும் புதிய கண்டுபிடிப்புகளும்)

12. கணினி தொடர்பிலான தேர்ச்சி :
(அ) பட்டம் :----.
(ஆ) டிப்ளோமா :----.
(இ) சான்றிதழ் பாடநெறி :----.

13. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழை யற்றவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நியமனம் வழங்க முன்னர் தெரிய வந்தால் எனது அபேட்சகத் தன்மை இல்லாதொழியும் எனவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்தத் தவறு தெரிய வந்தால் இதற்குரியதான நடவடிக்கைகளுக்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ................................. ஆந் திகதியன்று என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

15. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

(ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ............................. ........., தற்போது .................................... பதவியில் கடமையாற்றுகிறாரெனவும், அவருடைய வேலை மற்றும் நடத்தை

திருப்திகரமானதெனவும், ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லையெனவும் அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்குக் கருதவில்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்.

திகதி :----.

3-1320

---

**இலங்கைப் பொலிஸ்**

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2018.05.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480 - 7 ×3,600 - 27 X 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதி வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

* மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடைய வராவர் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : 5,712 ரூபா

(இ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா

(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;

(உ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

**இந்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு நிதி உதவிகள் வழங்கப்படும்) ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றுவதற்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.***- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.***- க.பொ.த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞானப் பாட இலக்கங்கள் 41, 44 ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா. தரப்) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தரப்) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) ***பௌதீகத் தகைமைகள் :***

* **உயரம்** : 5 அடி, 2 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு 1**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதித் தேவைப்பாடுகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைப்படி தகைமை பெறுவர்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவைப்பாடு.***- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்.***- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்).

5. ***ஆட்சேர்ப்பு முறை.***- விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற்தகுதிப் பரீட்சை :

1000 மீற்றர் ஓட்டம் - 05 நிமிடம் 14 வினாடிகள்

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இந்நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்:

(i) இவ் எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.

* பொது அறிவும் நுண்ணறிவுப் பரீட்சைக் காலம் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவப் பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.மருத்துவப் பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடநலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவப் பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட வர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத் தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாத வர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமன நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். நீங்கள் விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.-

(அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவர்கள் ஆவார்கள்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானி II இன் பிரகாரம் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபம் மற்றும் 2007.08.09ஆந் திகதிய அச்சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைக் காட்டி திருமணம் செய்ய இயலும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் கால நிலையில் இலங்கைப் பொலிஸ் சேவையில் பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி

விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வதை 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்த வுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக் காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஒ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புண்டு.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்கு புறம்பாகப் பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூ டாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இச்சான்றிதழ் இல்லாமல் விண்ணப்பம் அனுப்பினால் அது நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக் கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் வேண்டப்பட்ட விபரங்களைப் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,
2018, மாச்சு 06.

மாதிரி விண்ணப்பப்பபடிவம்

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

அலுவலக உபயோகத்திற்கு
அளவு 2" x 2 1/2"

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பும் முகவரி :----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு/கிராம அலுவலர் பிரிவு :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரி களைக் குறிப்பிடுக :-
(அ) -----.
(ஆ) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-----.

பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படைச் சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்:-----.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைச்சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத் திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள் ளதா ? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :
இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

3-1061/3

## இலங்கைப் பொலிஸ்

### பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2018.05.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. ***சம்பள அளவுத்திட்டம்.***- ரூபா 3,54,480 - 7 ×3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதிவரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : 5,712 ரூபா

(இ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா

(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ; 250 ரூபா ;

(உ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 x 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 x 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு பண உதவிகள் வழங்கப்படும்) ;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;
(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும்;
(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமை களைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.***- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கைப் பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.***- க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

***குறிப்பு 1***.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக் கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

***குறிப்பு 2***.- க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

***குறிப்பு 3***.- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) ***பௌதிகத் தகைமைகள் :***

* ***உயரம்*** : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* ***மார்பு*** : 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சுவிட்ட நிலையில்)

***குறிப்பு 1***.- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டு குழாமிலிருந்துதேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதி தேவைப்பாடுகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைப்படி அடிப்படை தகைமை பெறுவார்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவை***.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்***.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிற்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. ***ஆட்சேர்ப்பு முறை***.- விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற்தகுதிப் பரீட்சை :

1000 மீற்றர் ஓட்டம் - 03 நிமிடம் 4 வினாடி

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இந்நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் :

எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது; அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.
* பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சைக் காலம் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.மருத்துவப் பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடநலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவப் பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமன நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானி II இன் பிரகாரம் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் மற்றும் 2007.08.09 ஆந் திகதிய அச்சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் பிரகாரமும் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைக் காட்டி திருமணம் செய்ய இயலும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக சத்தியப் பிரமாணம்/உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக, சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவி நிரந்தரமான பின்னர் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்கு புறம்பாகப் பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ இலங்கைப் பொலிஸினால் வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,
2018, மாச்சு 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

**பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பும் முகவரி :----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு: ------/பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----. மார்பு : (அங்குலம்) : -----:

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரி களைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ?
(ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படைச் சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைச் சேவையில் இருந்துள்ளீர்களா? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :
இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

3-1061/1

## இலங்கைப் பொலிஸ்

பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2018.05.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480 - 7 ×3,600 - 27 X 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதி வரை சம்பளம் பொது நிர்வாக சுற்று நிருபம் இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்று நிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : 5,712 ரூபா

(இ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா

(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250ரூபா ;

(உ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

**இந்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக** :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு பண உதவிகள் வழங்கப்படும்) ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும்;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள்** :

(அ) **வயதெல்லை:** வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 19-29 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்:** க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித

பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) **பௌதீகத் தகைமைகள் :**

* **உயரம் :** 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* **மார்பு :** 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைப்படி அடிப்படைத் தகைமை பெறுவர்.

(ஈ) **தொழில் தகைமைகள்:**

(1) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(2) மேற்குறிப்பிட்ட சான்றிதழை பெற்ற பின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங்காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* வாகனத்தைத் திறமையாகச் செலுத்துவதற்கு தேவைப்படும் உடல் அவயங்களில் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்திசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் அவர் இப்பதவிக்கு தகுதியற்றவராகக் கருதப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அது போலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(உ) **பார்வை தொடர்பான தேவை:** ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(ஊ) **பிற தகைமைகள்**.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்).

5. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற்தகுதிப் பரீட்சை :

1000 மீற்றர் ஓட்டம் - 03 நிமிடம் 44 வினாடி

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்:

6. **தொழில்சார் பரீட்சை**: பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி.-

6.1 இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழிசார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் -

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்
(ஆ) வீதிச் சட்ட அறிவுரை - 25 புள்ளிகள்
(இ) வாகனப் பராமரிப்பு மற்றும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்

6.3 ***தொழில்சார் பரீட்சை :***வாகனம் செலுத்தும் தகுதிப்பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 25 புள்ளிகளுக்கு வீதிச்சட்ட அறிவுரைப் புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகள்ஆகக் குறைந்தது 12.5 புள்ளிகளும் , வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப் புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர்.

**குறிப்பு**: சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுநர் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலத்தில் நடைபெறும் கனரக வாகனம் ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

7. **மருத்துவப் பரிசோதனை** :

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.மருத்துவப் பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடநலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்பட்டும் என்பதுடன் மருத்துவப் பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

8. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

9. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல்** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாதவர்களின் சம்பள ஏற்றங்கள் உரிய நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப் பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரம் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதி திருத்தஞ் செய்யப்பட்ட அச்சுற்று நிருபத்தின் பிரகாரமும் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைக் காட்டி திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸ் சேவையில் பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிற்சியினை ஆரப்பித்தவுடன் உடனடியாக, இல. 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றிக்கையின் பிரகாரம் பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினைப் பின்பற்றுவதாக சத்தியப் பிரமாணம் உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கை பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையராவர்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.

14. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ இலங்கைப் பொலிசினால் வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,
2018, மாச்சு 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி

அலுவலக உபயோகத்திற்கு
அளவு 2" x 2 1/2"

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பும் முகவரி :----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :------. பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----. மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ) வானம் ஓட்டும் அனுமதிப்பத்திர இலக்கம் ----.
(ஆ) வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி .----.
(இ) திறமை பெற்ற வாகனங்களின் வகுப்புகள் -----.
(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ?( சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)----.

12. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

16. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படைச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? :-----.
அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட் டுள்ளதா? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கைப் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் திணைக்கள சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

21. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :
இந்த விண்ணபதாரி ........................................ அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

3-1061/2

---

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

*நிறைவேற்று சேவை வகைக்குரிய சட்ட அலுவலர் பதிவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 2018*

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் நிறைவேற்று சேவை வகைக்குரிய சட்ட அலுவலர் III ஆம் தர பதவிகளின் நிலவுகின்ற 01 வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு தகுதியானவரை தெரிவு செய்வதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு அமைய தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவிப்பின் இறுதியில் உள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், சுகாதார, போசணைகள் மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, "சுவசிறிபாய" 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10." எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் " சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சட்ட அலுவலர் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு- 2018" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அத்துடன் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களுக்கு சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பங்களுக்கு தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 2018.04.30 ஆகும்.

குறிப்பு: விண்ணப்பங்கள் தபாலில் தொலைதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் தினம் வரை விண்ணப்பத்தை தாமதிக்க செய்வதானால் ஏற்படக்கூடிய இழப்புக்களை தாமே பொறுப்பேற்றல் வேண்டும்.

01. **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை பெபேறுகளின் அதிகூடிய புள்ளியைப்பெறும் விண்ணப்பதாரி வெற்றிடத்திற்காக இணைத்துக்கொள்ளப்படும். அதன் போது அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

02. **சேவையில் இணைக்கும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்துடன் கூடியது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய சம்பளம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும். அத்துடன், நீங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/தபுதாரன் அநாதைகள், ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் முறைகளுக்கு ஏற்ப நீங்கள் அதற்கான உதவித்தொகை செலுத்த வேண்டும்.

(ii) இந்நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படபட்டதாகும். சட்ட அலுவலர் III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 03 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைய முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 இற்கு அமைய பதவிக்கு இணைந்து 05 வருடங்களுக்குள் சேவைக்கு இணைந்த மொழிக்கு மேலதிகமாக ஏனைய மொழியில் தேர்ச்சியடைந்தல் வேண்டும் என்பதுடன் அரச மொழி தவிர்ந்த மொழியில் சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர் தகுதிகாண் காலத்திற்னுள் உரிய அரச மொழியில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் அரச சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப்பிரமாணம், திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு அமைவானதாகும்.

3. **தகைமைகள்:**

3.1 **கல்வி/தொழிற் தகைமைகள்:-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

3.2 **அனுபவம்:-**

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் 03 வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில் அனுபவம் கொண்டிருத்தல் ( தொடர்ச்சியான சேவைக்காலத்தை உறுதி செய்வதற்கு சமர்ப்பிக்கும் ஆவணங்களில் அனுபவம் பெற்ற காலம் , திகதி மற்றும் பதவி முத்திரை தெளிவாகக் குறிப்பிட்டு நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.)

3.3 **உடற்தகைமைகள்:-**

இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும், பதவிக்குரிய கடமைகளை செய்வதற்கும், போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

3.4. **ஏனைய தகைமைகள் :-**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவராயிருத்தல் வேண்டும்.
(iii) சேவைக்கு இணைத்துக்கொள்ள தேவையான சகல தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(iv) ஆங்கில மொழியை திறமையாக கையாளக்கூடியவராக இருத்தல்.

04. **வயதெல்லை.** - விண்ணப்பமுடிவுத் திகதிக்கு 21 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **சம்பள அளவுத் திட்டம்:**

2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இல் உப ஆவணம் (I) இன் பிரகாரம் இப்பதவிக்கு உரித்தான மாத சம்பளம் ரூபா 47,615 - 10 x 1, 335 - 8 x 1, 630 - 17 x 2170 - 110,895 =(SL-1 - 2016) ஆகும். அந்த சுற்றறிக்கையில் II ஆவது உப அட்டவணைக்கு அமைய உங்களுக்கான சம்பளம் வழங்கப்படும்.

06. கட்டடமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளித்திட்டத்திற்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும்.

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | **20** |
| | பட்டம் அல்லது சட்டக்கல்லூரி தமைமைகளில் ஒன்றுக்காக மாத்திரம், அதன் கீழ் அதிகூடிய தகைமைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்ற சட்டம் தொடர்பான பட்டம் | | |
| | முதல் தரத்தில் சித்தியடைந்திருத்தல் | 20 | |
| | இரண்டாம் தரத்தில் உயர் சித்தியடைந்திருத்தல் | 15 | |
| | இரண்டாம் தரத்தில் தாழ் சித்தியடைந்திருத்தல் | 10 | |
| | (ஆ) சட்டக்கல்லூரியில் பெற்ற சட்டம் தொடர்பான பட்டம் | 15 | |
| | இறுதியாண்டில் முதல் தரத்தில் சித்தியடைந்திருத்தல் | 10 | |
| | இறுதியாண்டில் இரண்டாம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் | | |
| | **குறிப்பு:** சிறந்த சித்தியுடன் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்கப்படும் | | |
| 02. | **மேலதிக தொழிற் தகைமைகள்** | | **15** |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத்துறை தொடர்பான உயர்கற்கை பட்டம் | 15 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத்துறை தொடர்பாக ஒரு வருடத்திற்கு குறையாத உயர்கற்கை டிப்ளோமா (ஒரு உயர்கற்கை டிப்ளோமாவிற்கு 7.5 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 15) | 15 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத்துறை தொடர்பாக 06 மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா கற்கை நெறிக்கு (ஒரு டிப்ளோமாவிற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 15) | 15 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத்துறை தொடர்பாக 03 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாட நெறிக்கு ( ஒரு பாடநெறிக்கு 05 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 10) | 10 | |
| 03 | **மேலதிக அனுபவம்** | | **30** |
| | சட்டத்தரணியாக அரச சேவையில் அல்லது தனியார் பிரிவில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட மற்றும் ஒரு வருடத்திற்குக் குறைந்த அனுபவத்திற்கு - 02 புள்ளிகள் | | |

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 30<br>(அடிப்படைத் தகைமைகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சட்டத்தரணியாக செயற்பட்ட 03 வருட சேவைக்காலத்தை தவிந்த)<br><br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணி ஒருவரினால் அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) | | |
| **04.** | **தகவல்கள் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்திற்காக தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமொன்றாக கற்றிருத்தல்<br><br>அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 01 வருட காலத்திற்குக் குறையாத<br>தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறி அல்லது 1500 மணித்தியாலத்திற்கு<br><br>அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான<br>சான்றிதழ் கற்கை நெறிக்கு<br><br>06 மாதங்கள்/720 மணித்தியாலங்கள்<br>03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள்<br>(அதிகூடிய தகைமைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 10<br><br>10<br><br>07<br>05 | **15** |
| **05.** | **ஆங்கில மொழி அறிவிற்காக**<br>ஆங்கில மொழியில் கற்ற உயர் கற்கை பட்டம் /பட்டம் உயர்கற்கை சட்டவியல் பட்டம்/ சட்டவியல் பட்டம்<br>(உரிய பரீட்சை வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழியில் பதிலளித்திருத்தல் வேண்டும்)<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா கற்கை நெறிக்கு<br>(ஒரு வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்)<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் கற்கை நெறிக்கு<br><br>06 மாதங்கள்/720 மணித்தியாலங்கள்<br>03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள்<br>(அதிகூடிய தகைமைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 15<br><br>10<br><br>07<br>05 | **15** |
| **06.** | **நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறமைக்காக** | | **05** |
| | **மொத்தம்** | | **100** |

07. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்:**

சகல விதத்திலும் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களின் மூலப்பிரதி மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த கீழுள்ளவற்றுள் ஏதாவது ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை ;
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்:**

i சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ளது . விண்ணப்பங்கள் A4 அளவைக்கொண்ட தாளில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் 01- 06 வரை முதல் பக்கத்திலும் , 07- 09 வரையான விபரங்களை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்குவதற்கு ஏற்ற முறையில் தயாரிக்கப்பட வேண்டும். அதற்குரிய விபரங்கள் தமது சொந்த எழுத்தில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

ii விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதிவான்/ சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது ரூபா 22, 935 மாதாந்த ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

iii. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தை தம் சேவையாற்றும் நிறுவனத்தின் நிறுவனத் தலைவரினூடாக சமாப்பித்தல் வேண்டும்.

iv. மாதிரிப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணமாமற் போதல் அல்லது தாமதித்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

09. **உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வழங்குதல்:**

தங்களினால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பத்தில் குறிப்படப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டறியப்பட்டால் உங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறே விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய நியதிகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதாவது முரண்பாடுகள் காணப்பட்டால் அதன் போது சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

11. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் இருத்தல் தொடர்பான அதிகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவிற்கு உண்டு.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் விதிமுறைகளுக்கு அமைய,

ஜனக்க சுகததாஸ,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய
அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2018, மாச்சு 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

சுகாதார, போசணை சுதேச வைத்திய அமைச்சின் சட்ட அலுவலர் - III ஆம் தர பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

வதிவிட மாவட்டம்: ☐

01. 1.1 முதலெழுத்துக்கள் பெயரின் பின்னால் வருமாறு முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு. /திருமதி / செல்வி -----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ + ம்- Mr/ Mrs/ Miss. SILVA A.B

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):-----.

1.3 முழுப் பெயர் ( சிங்களம்/தமிழில்):-----.

02. 2.1 முகவரி ( தனிப்பட்டது):----.
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :-----.

2.2 முகவரி ( தனிப்பட்டது):----.
(சிங்களம் /தமிழில்) :-----.

2.3 முகவரி ( அலுவலகம்):----.
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :-----.

2.2 முகவரி ( அலுவலகம்):----.
(சிங்களம் /தமிழில்) :-----.

(அரசாங்க சேவை /மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபனம் ஒன்றில் பணிபுரியும் அலுவலர்களின் அலுவலக முகவரியை குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதாவது மாற்றங்கள் இருப்பின் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

2.5 தொலைபேசி இலக்கம் (தனிப்பட்ட) :-----.

2.6 தொலைபேசி இலக்கம் (அலுவலக) : -----.

2.7 மின்னஞ்சல் முகவரி (Email Address) :-----.

03. 3.1 பிறந்த திகதி:-----.
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி: ☐☐

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:
வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

04. தேசிய அடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐

05. பால் (ஆண்/பெண்) :----.

06. தகைமைகள் (விளம்பர அறிவித்தலில் பிரிவு 03 இன் கீழுள்ள தகைமைகள்) :-----.

கல்வித் தகைமைகள்: -----.

அனுபவம்: -----.

**விண்ணப்பதாரியின் உறுதிமொழி :**

07. இவ் விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும் சரியானவை எனவும் உறுதி மொழிகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் உண்மையற்றதெனவும் அல்லது பிழையானவை எனவும் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரராயின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னரராயின் எதுவித நட்டஈடுகளும் இன்றி சேவையிலிருந்து நான் நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

..........................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:-----.

08. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி ...................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் ......................... ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
( பதவி முத்திரையுடன் உறுதி செய்தல் வேண்டும்.)

திகதி:...................................................

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-----.
பதவி :-----.
(பதவி முத்திரையுடன்)
முகவரி :-----.

09. **திணைக்களம்/ நிறுவனத் தலைவரின் உறுதிமொழி ( அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு மாத்திரம் :**

இந்த விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ...................................... என்பவர் இத் திணைக்களத்தில் /மாகாண சபையில்/ நிறுவனத்தில் ......................... ஆந் திகதயிலிருந்து பணியாற்றுகின்றார். அவர் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான / தற்காலிகமான பதவி ஒன்றினை வகிக்கின்றார். கடந்த .................................... காலப்பகுதியில் சகல வேதன ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும், அவர் எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை (எச்சரிக்கை தவிர) என்றும், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்திலுள்ள ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட்டது என்றும் அதன்படி அவை அனைத்தும் சரியானவை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவர் விடுவிக்க முடியும்/முடியாது என்றும் ............................ .............ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..........................................,
திணைக்களம்/நிறுவன தலைவரின் கையொப்பம்.
( பதவி முத்திரையுடன் உறுதி செய்தல் வேண்டும்.)

பெயர்:-----.
பதவி :-----.
திகதி :-----.
(பதவி முத்திரையுடன்)
திணைக்களம்/நிறுவனம் :-----.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விணணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | ஹொரொவ்பொத்தானை | வடக்கு மஹபொத்தானை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹுருளு பலாத பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | ரம்பேவ | ரம்பேவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம் பலாத பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

3-1371

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விணணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே மாதம் 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மார்ச்சு 15.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | ஆரச்சிக்கட்டு | புத்தளம் மாவட்டத்தின் உடப்பு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வடக்கு பிடிகல் கோறளைப் பிரிவின் (பொது) விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | நாத்தாண்டிய | முதுகட்டுப் பிரிவின் பிறப்பு,இறப்பு மற்றும் தெற்கு பிடிகல் கோறளைப் பிரிவின் (பொது) விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

3-1372

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - பொலநறுவை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பொலநறுவை | லங்காபுரம் | மத்தியபற்று வடக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தம்மன்கடுவை பலாத பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பொலன்னறுவை |

03-1373

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம்/பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மார்ச் 15.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | உடுபத்தாவ | யகம்பற்று கோறளைப் பிரிவின் (பிங்கிரிய) மேலதிக (கண்டிய/பொது) விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | குளியாபிட்டிய மேற்கு | கட்டுகம்பளை தெற்கு கோறளையின் பிறப்பு, இறப்பு மற்றும் கட்டுகம்பளை ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| குருநாகல் | கொபெய்கனே | பலதொர கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தேவமெதி ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | பிங்கிரிய | கிணியம கோறளைப் பிரிவின் கட்டுகம்பளை ஹத்பற்று பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | ரிதிகம | இஹல விசிதெக்க கிழக்கு கோறளைப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹிரியால ஹத்பற்று பிரிவின் (கண்டிய/ பொது) விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | மகவ | கட்டுவன்னா கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வன்னி ஹத்பற்று பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

*3-1374*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம்/பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விணணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | உக்வத்த பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் காலி நாற்புறமும் சூழலும் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |
| காலி | இமதுவ | ஹவுபெ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தல்பெ பற்று பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |
| காலி | ஹிக்கடுவ | வேரகொட பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வெல்லபட பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |
| காலி | நாகொடை | உனன்விட்டிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கங்கபட பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |
| காலி | கோனபினு வளை | கிரிந்தி எல்ல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கோனபினுவளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |

03-1293

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

03. விண்ணப்பதாரரின் வயது 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன், 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவு கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்தி சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

5. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி நகரம் (மேற்கு) பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |

3-1276

---

**சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு**

சமூக சேவைகள் திணைக்களம்

**தொழிற் போதனாசிரியர் - தரம் III, சைகை மொழிபெயர்ப்பாளர் - தரம் III, பயிலுநர் மொழிபெயர்ப்பாளர் - தரம் III, புனர்வாழ்வு உதவியாளர் (ஒப்பந்தம்), வீட்டுக் காப்பாளர்**

சமூக சேவைகள் திணைக்களத்தின் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 2 வது மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2018.05.02 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "........................................................ பதவி தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialemwelfare.gov.lk இணையத் தளமூடாகவும் மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1. **தொழிற் பயிற்சிப் போதனாசிரியர் (15பதவிகள்)**

1.1 **வெற்றிடம் நிலவும் நிறுவனங்கள்**

- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், சீதுவ.
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், கட்டவெல.

- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், வத்தேகம.
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், தெளம்புயாய.
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், அமுனுகும்புர.
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், கலவான.
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், மாதம்பே.
- ஜயவிரு சமாதி இல்லம், புவக்பிட்டிய

1.2 தொழிற் பயிற்சிப் போதனாசிரியர் வெற்றிடங்கள் நிலவும் பாடநெறிகள்

| தொடர் இலக்கம் | பாடநெறி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | எந்திர வல்லுனர் | 01 |
| 02 | உள்ளூர் மின்வல்லுனர் | 01 |
| 03 | புகைப்படம் மற்றும் வீடியோ பிடிப்பாளர் | 01 |
| 04 | எலெக்றோனிக் | 01 |
| 05 | கைவினைத் தொழில் | 01 |
| 06 | சீமெந்துத் தொழில் | 01 |
| 07 | புடைவைத் தொழில் | 01 |
| 08 | மோட்டார் தொழில்நுட்பம் | 01 |
| 09 | மின் வல்லுனர் | 01 |
| 10 | தச்சுத் தொழில் | 01 |
| 11 | கைத்தொழில் வயறிங் | 01 |
| 12 | அலுமினியத் தயாரிப்பு | 01 |
| 13 | கையடக்கத் தொலைபேசியினைப் பழுதுபார்த்தல் | 01 |
| 14 | பூங்காவினை அலங்கரித்தல் | 01 |
| 15 | விவசாயம் | 01 |

1.3 ***வயது வரையறை :***

விண்ணப்பப் படிவம் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.4 ***கல்வித் தகைமைகள்:-***

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலமொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு விடயங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடைவையில் (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ii) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில், வேண்டிய பாடவிதானமொன்றில் சகல பாடங்களிலும் (பொது உளச் சார்புப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்திபெற்று மூன்றாம் நிலைக் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்குத் தேவையான மட்டத்தினைப் பெற்றிருத்தல்.

1.5 ***தொழிற் தகைமைகள்:-***

I. உரிய தொழில் தொடர்பில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது ஜேர்மன் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதி தொடர்பில் பெற்றுக் கொண்ட சான்றிதழ் அல்லது ;

II. உரிய தொழில் தொடர்பில் சிறு கைத்தொழில் திணைக்களத்தில் அல்லது தோல் கைத்தொழில் திணைக்களத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதி தொடர்பில் பெற்றுக் கொண்ட சான்றிதழ் அல்லது;

III. உரிய தொழில் தொடர்பில் சமூக சேவைகள் திணைக்களம் அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களினூடாக நடாத்தப்பட்டு வரும் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதி தொடர்பில் பெற்றுக் கொண்ட சான்றிதழ் ; அல்லது

IV. வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அதனுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பில் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதி தொடர்பில் பெற்றுக் கொண்ட சான்றிதழ் ; அல்லது

V. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வரும் தேசியத் தொழிற் திறன் (NVQ) மற்றும் (05) ஆம் மட்டத்திற்கு உள்ளடக்கப்படும் உரிய தொழில்நுட்பப் பாடநெறியொன்று அல்லது அதற்குச் சமமானமூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பாடநெறியொன்றினை வெற்றிகரமாக முன்னெடுத்து சான்றிழினைப் பெற்றிருத்தல்.

1.6 ***ஆட்சேர்ப்புத் திட்டம் :-*** எழுத்து மூல மற்றும் தொழில் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் 03 மாதங்கள் கற்பித்தல் திட்டங்கள் தொடர்பில் பயிற்சிப் பாடநெறியினை மேற்கொண்டு வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.6.1 எழுத்து மூலப் பரீட்சை :-

| | | |
|---|---|---|
| I. | பொது உளச்சார்புப் பரீட்சை | - காலம் 01 மணி, (மொத்தப் புள்ளிகள் 100) |
| II. | புரிந்துணர்வு | - காலம் 02 மணி, (மொத்தப் புள்ளிகள் 100) |

1.6.2 தொழில் பரீட்சை :-

தேசியப் பயிலுனர் மற்றும் கைத்தொழில் அதிகார சபையினால் செய்முறைப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலும் மற்றும் தொழில் பரீட்சையிலும் ஆகக்குறைந்த வகையில் 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.6.3 சம்பள அளவுத் திட்டம் :-

பொ.நி.சு. 03/2016 பிரகாரம் MT-01-2016

சம்பள அளவுத் திட்டம் - ரூபா. 29,840-10 × 300 -11 × 350 -10 × 560 -10 × 660 - ரூபா 48,890 ஆகும். (இச்சம்பள அளவுத் திட்டம் 2020.01.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.)

2018ஆம் ஆண்டுக்கு உரித்தான சம்பளம்:- அடிப்படைச் சம்பளம் ரூபா. 23674/-

சீர்செய்தல் கொடுப்பனவு ரூபா.3665/-

1.7 ***சேவை நிபந்தனைகள்:-***

இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும் என்பதுடன், ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்குக் கீழ்ப்படிவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிரூபங்களின் பிரகாரம் 05 வருடங்களினுள் குறிப்பிட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2. ***சைகைமொழி பெயர்ப்பாளர் (சிங்கள மொழி பதவிகள் 03, தமிழ் மொழி பதவி 01)***

2.1 ***வெற்றிடம் நிலவும் நிறுவனங்கள்***

- சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதான அலுவலகம்
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், சீதுவ

- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், மாதம்பே
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம், கலவான

2.2. ***வயது வரையறை:-***

விண்ணப்பப் படிவம் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 30 வயதிற்கு மேலாகவும் இருத்தலாகாது.

2.3 . ***கல்வித் தகைமைகள்:-***

I. க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு விடயங்களில் (02) திறமைச் சித்தியுடன் ஒரே தடைவையில் ஆறு பாடங்களில் (06) சித்திபெற்றிருத்தல்.

II. க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஆகக்குறைந்த வகையில் ஒரு விடயத்திலாவது (பொது அறிவுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்திபெற்றிருத்தல்.

2.4. ***தொழிற் தகைமைகள் :-***

தேசியக் கல்வி நிறுவனத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு வருட சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

2.5. ***ஆட்சேர்ப்புத் திட்டம்.-*** எழுத்து மூலப் பரீட்சைப் பெறுபேற்றின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

***எழுத்து மூலப் பரீட்சை :***

I. பொது உளச்சார்புப் பரீட்சை- காலம் 01 மணி, (மாத்தப் புள்ளிகள் 100)

II. மொழித் திறன் - காலம் 01 மணி, (மொத்தப் புள்ளிகள் 100)

தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலும் ஆகக்குறைந்த வகையில் 40 % புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.6. ***சம்பள அளவுத் திட்டம் :-***

பொ.நி.சு.03/2016 பிரகாரம் MN - 01-2016

சம்பள அளவுத் திட்டம் -ரூபா.27140-10 × 300-11 × 350-10 × 495-10 × 660- ரூபா 45,540 ஆகும். (இச்சம்பள அளவுத் திட்டம் 2020.01.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.)

2018ஆம் ஆண்டுக்கான சம்பளம்:- அடிப்படைச் சம்பளம் ரூபா.21532/-

சீர்செய்தல் கொடுப்பனவு ரூபா.4302/-

2.7. ***சேவை நிபந்தனைகள்:-***

இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும் என்பதுடன், ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்குக் கீழ்ப்படிவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிரூபங்களின் பிரகாரம் 05 வருடங்களினுள் குறிப்பிட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**குறிப்பு:**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், உரிய வெற்றிடங்களைக் கொண்ட நிறுவனத்தில் 05 வருடம் கட்டாயம் சேவையாற்றுதல் வேண்டும்.

**3. பயிலுனர் மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) (பதவி 01 - ஒப்பந்தம்)**

**3.1. வயது வரையறை :-**

விண்ணப்பப் படிவம் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று 21 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**3.2. கல்வித் தகைமைகள்:-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

**3.3. தொழிற் தகைமைகள்:-**

பதவிக்கான துறையில் பெற்றுக் கொண்ட தொழிற் தகைமைகள் விசேட தகைமையொன்றாக கவனத்திற் கொள்ளப்படும்.

**3.4. அனுபவம்:-**

பதவிக்கான துறையின் அனுபவம் விசேட அனுபவமொன்றாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**3.5. ஆட்சேர்ப்புத் திட்டம்:-**

கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**3.6. சம்பளம்:-**

ரூபா 15,215/- மற்றும் தற்போது வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும் உரித்தாகும். (புதிய சம்பளக் கட்டமைப்பு பின்னர் சீர்செய்யப்படும்.)

**3.7. சேவை நிபந்தனைகள் :-**

இப்பதவி தொடர்பில் வருடா வருடம் நீடிப்புச் செய்வதனை அடிப்படையாகக் கொண்டு, ஒரு வருட ஒப்பந்த அடிப்படையின் கீழ் நியமிக்கப்படுவர். நிரந்தர நியமனமொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கோ அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு உரித்தான பயன்கள் அல்லது உரித்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கோ இயலாத பதவியொன்றாகும்.

**குறிப்பு**
சகல விண்ணப்பதாரரும் இலங்கையின் வேண்டிய பிரதேசத்தில் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டவராக இருத்தல் வேணடும். மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே விண்ணப்பப் படிவங்களை முன்வைத்தல் வேண்டும்.

**4. புனர்வாழ்வு உதவியாளர் (பதவிகள் 02 - ஒப்பந்தம்)**

**4.1. வெற்றிடம் நிலவும் நிறுவனம்**

- ஜயவிரு சமாதி இல்லம், புவக்பிட்டிய.

**4.2. வயது வரையறை :-**

விண்ணப்பப் படிவம் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**4.3. கல்வித் தகைமைகள்:-**

க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன், ஆறு விடயங்களுக்குக் குறையாது சித்தியடைந்திருத்தல்.

4.4. ***தொழிற் தகைமை:-***

பதவிக்கான துறையின் தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் விசேட தகைமையொன்றாக கவனத்திற் கொள்ளப்படும்

4.5. ***ஆட்சேர்ப்புத் திட்டம் :-***

*கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.*

4.6. ***மாதாந்தக் கொடுப்பனவு:-***

*முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் கொடுப்பனவொன்றாக மாதாந்தம் ரூபா. 24240/- உரித்தாகும்.*

4.7. ***சேவை நிபந்தனைகள்:-***

இப்பதவி ஒப்பந்த அடிப்படையின் கீழ் உருவாக்கப்பட்ட பதவியொன்றாவதுடன், நிரந்தர நியமனமொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கோ அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு உரித்தான பயன்கள் அல்லது உரித்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கோ இயலாத பதவியொன்றாகும்.

5. **வீட்டுக் காப்பாளர் (07 பதவிகள்)**

5.1. ***வயது வரையறை :-***

*விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

5.2. ***கல்வித் தகைமைகள் :-***

*(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடைவையில் ஆறு பாடங்களில் (06) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*(ஆ) க.பொ.த (உ.த) பரீட்சியில் ஆகக் குறைந்த வகையில் ஒரு பாடத்திலாவது (பொது அறிவுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.*

5.3. ***தொழிற் தகைமைகள்:-***

*அரசின் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில் சிறுவர் அபிவிருத்தி தொடர்பில் அல்லது சமூகப் பணி தொடர்பில் அல்லது வதிவிடத்தினை நிர்வகித்தல் தொடர்பில் 03 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியினை முன்னெடுத்து சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.*

5.4. ***ஆட்சேர்ப்புத் திட்டம் :-***

எழுத்து மூலப் பரீட்சையின் இரண்டு வினாத்தாளிலும் சித்திபெற்று, ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கிடையே வெற்றிடங்கள் நிலவும் எண்ணிக்கைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

5.4.1. *எழுத்து மூலப் பரீட்சை*

I. *பொது உளச்சார்புப் பரீட்சை-காலம் 01 மணி (மொத்தப் புள்ளிகள் 100)*

II. *மொழித் திறன் - காலம் 01 மணி (மொத்தப் புள்ளிகள் 100)*

5.5. ***சம்பள அளவுத் திட்டம்***

*பொ.நி.சு.03/2016 பிரகாரம் MN-01-2016*

*சம்பள அளவுத் திட்டம் - ரூ.27140-10×300-11×350-10×495-10×660- ரூபா 45,540 ஆகும். (இச்சம்பள அளவுத் திட்டம் 2020.01.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.)*

*2018ஆம் ஆண்டுக்கான சம்ளம்:-* *அடிப்படைச் சம்பளம் ரூபா.21532/-*
*சீர்செய்தல் கொடுப்பனவு ரூபா.4306/-*

5.6. ***சேவை நிபந்தனைகள்:-***

இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும் என்பதுடன், ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்குக் கீழ்ப்படிதல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிரூபங்களின் பிரகாரம் ஐந்து வருடங்களினுள் குறிப்பிட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**குறிப்பு**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் புவக்பிட்டிய ஜயவிரு சமாதி போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்திற்கு இணைக்கப்படுவர் என்பதுடன் இது தொடர்பில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்.

வஜிர கம்புருகமுவ,
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைள் திணைக்களம்,
2 வது மாடி,செத்சிறிபாய கட்டம் II,
பத்தரமுல்ல,
2018.03.16

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சமூக சேவைகள் திணைக்களம்**

....................................................... பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

01. முதலெழுத்துக்களுடன் பெயர்: ...............................................................................

02. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :- ................................................................................

03. முகவரி : ...............................................................................

04. தொலைபேசி இலக்கம் : ...............................................................................

05. தேசிய ஆள் அடையாள அட்டை இல் : ...............................................................................

06. பிறந்த திகதி : ...............................................................................

07. விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது:-

வருடங்கள் : ................. மாதங்கள்: ................. நாட்கள்: .................

08. திருமணமானவரா/திருமணமாகாதவரா : .......................................

09. ஆண்/பெண் பாகுபாடு : ........................................

10. கல்வித் தகைமைகள் :-

I. க.பொ.த. (சாதாரண தரம்)
வருடம் :- ................ பரீட்சைச் சுட்டெண்:- ......................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

II. க.பொ.த. (உயர் தரம்)
வருடம் :- ……………..    பரீட்சைச் சுட்டெண்:- …………………..

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

11. தொழில் மற்றும் ஏனைய தகைமைகள் :-

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | பாடநெறியின் காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

12. அனுபவம் :-

.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................

13. பட்டச் சான்றிதழ் தொடர்பிலான விபரங்கள் (பயிலுனர் மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு மாத்திரம் தொடர்பானது)

I. பட்டம் :-...............................................................................

II. பல்கலைக்கழகம்/நிறுவனம் :-...............................................................................

III. பட்டம் அமுலுக்கு வரும் தினம் :-...............................................................................

IV. சாதாரணம்/விசேடம் :-...............................................................................

V. விடயம் :-...............................................................................

VI. வகுப்பு :-...............................................................................

இவ் விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும் மற்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிமொழி பகர்கின்றேன்.

............................................    ............................................
திகதி    விண்ணப்பதாரரின் ஒப்பம்.

3-1479

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2018**

நிலஅளவையாளர் நாயகத்தால், உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.-

பகுதி I – ஆள் கூற்றுப்பத்திரம் தயாரித்தல்
பகுதி II – பட வேலை

2. பகுதி I - பரீட்சை 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதியும், பகுதி II - பரீட்சை 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 மற்றும் 14 ஆந் திகதிகளிலும் நடைபெறும். பகுதி I பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள், பகுதி II பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I மற்றும் பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்றைச் சரியாக தயார் செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூறுகளைக் கணித்தல் ;

(ஆ) புலக் குறிப்பிலிருந்து சரியான கிடைப்படம் ஒன்றை ஆள் கூறுகளையும், புறக்டாக்ரரையும் (protractor) பாவித்துக் கீறி சரியாகப் பரப்பைக் கணிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

4. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகள் :

(அ) தேசிய கல்விச் சான்றிதழ் (N. C. E.) அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு (02) திறமைச்சித்தி (Credit Pass) உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி ;

மற்றும்

(ஆ) ஒரு வருடத்திற்கு குறையாத படவரைஞர் பாடநெறியுடன் தொடர்புடைய பாடநெறியை அரச தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது வேறு பகுதி அரச நிறுவனங்களில் (Semi Government Institution) வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

5. பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக் கட்டணம் 800 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணத்தை நில அளவையாளர் நாயகத்தின் சிறாப்பர் அலுவலகத்திலோ, எந்த ஒரு மாவட்ட நில அளவை அலுவலகத்திலோ அல்லது அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் ஒரு புகைப்படப் பிரதியை எதிர்கால தேவைக்காக வைத்திருக்கவும்.) மேலும் காசுக்கட்டளைகளோ, காசோலைகளோ இதன் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முத்திரைகளாகவோ அல்லது காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்.- இந்த விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 21 செ. மீ. x 29 செ. மீ. (A4) அளவிலான தாளில் இரு பக்கங்களையும் பாவித்துத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2018" என்று குறிப்பிடவும்.

சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை),
பரீட்சைகள் கிளை,
நில அளவையாளர் நாயக அலுவலகம்,
தபால் பெட்டி இலக்கம் 506,
கொழும்பு.

தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும், விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

7. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

8. 2018 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள், ஆள் கூறுக்களைக் கணிக்க உதவும் கணித வாய்ப்பாடுகள் மற்றும் விண்ணப்பதாரிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற்பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப்பொறிகள் (Non Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

10. (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமளவுக்கு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு

ஆவணத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம் :-

(அ) ஆள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு பரீட்சை தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் நிழற் படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச்சீட்டு;

(ii) பந்தி 10 (i) இல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

11. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடத்தப்படும்.

பி. எம். பி. உதயகாந்த,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
த. பெ. இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 05,
2018, மாச்சு 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

*நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2018*

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலகப் உபயோகத்திற்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி :
தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :
தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ஆ) பால் :----.

(இ) பதவி :----.

(ஈ) தொழில் செய்யுமிடத்தின் முகவரி :----.

(உ) நிரந்தர முகவரி :

தமிழில் :----.

ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ஊ) பிறந்த திகதி :----.

(எ) கல்வித் தகைமைகள் (உறுதிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகள் (certified true copies) இணைக்கப்பட வேண்டும்) :----.

(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :----.

(ஐ) காசு செலுத்திய அலுவலகம் :----.

(ஒ) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

திகதி :----.

(பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.)

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும், உண்மையானதென்றும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-1140

---

**இலங்கைத் தொழிநுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2017**

(முகாமைத்துவம் தொடர்பான மூன்றுமாத சான்றிதழ் பாடநெறி)

இலங்கைத் தொழிநுட்ப சேவைப் பிராமாணக்குறிப்பிற்கு இணங்க மேற்படி பாடநெறி இல. 1930/12 மற்றும் 2015.09.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் , இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் 2018, யூலை மாதம் வார இறுதி பாடநெறியாக 15 வாரங்கள் சனிக்கிழமைகளில் ஆரம்பித்து நாடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02 (i) இப்பாடநெறி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுவதுடன், பாடநெறியின் இறுதியில் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் இறுதிப் பரீட்சை நடைபெறும். அப் பெறுபேறுகளின்படி பாடநெறியில் சித்தியடைவது தொடர்பாக தீர்மானிக்கப்படுவதுடன், சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மேற்படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுவர். பாடநெறிக்கு அலுவலர்களைத் தேர்தெடுத்தல், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சான்றிதழ்களை வெளியிடல் மற்றும் பாடநெறிக்கான சலுகைக் காலம் வழங்கல் சம்பந்தமாக அப்பீடத்தின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பாடநெறியைத் தொடரும் அபேட்சகர்கள் கீழ்ப்படுதல் வேண்டும். பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில், இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் தண்டனை மற்றும் தாபனக் கோவையின் ஏற்பாடுகள் என்பனவற்றுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் பாடநெறியின் ஆரம்பத்தில் தங்களுக்கு அறிவிக்கப்படும்.

03. இப் பாடநெறி தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான மாதிரிப் படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம் மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரி தாமாகவே விண்ணப்பப்படிவம் ஒன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளதுடன், இலங்கைத் தொழிநுட்ப சேவையைச் சார்ந்த மத்திய அரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், தமது திணைக்களத்தின் தலைவர் ஊடாகவும், இலங்கைத் தொழிநுட்ப சேவையைச் சார்ந்த மாகாணஅரசாங்கத்தின் அலுவலர் ஒருவராயின், அவர்கள் சேவையாற்றுகின்ற மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும், 2018, மே மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடம், இலங்கை ஸ்ரீ ஜவர்த்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை எனும் முகவரிக்கு தனது விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில், இலங்கைத் தொழிநுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை- 2017 (முகாமைத்துவம் தொடர்பான மூன்றுமாத சான்றிதழ் பாடநெறி) என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எவ்வித விசாரணையுமின்றி நிராகரிப்பதற்கு பீடாதிபதிக்கு அதிகாரமுண்டு.

**ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்**

04. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதி திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். அது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள

ஆவணங்களில் ஒன்றை பாடநெறியின் ஆரம்பத்தில் அல்லது பாடநெறிக் கால எல்லையினுள் முன்னளித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாளஅட்டை

(ஆ) தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அடையாளஅட்டை

அல்லது

தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாளத்தை உறுதி செய்யக்கூடிய ஆவணம்

05. **விண்ணப்பம்**:

I. “A4 ”அளவுடைய கடதாசியில் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை டைப் செய்து தயாரித்துக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும்,அது சரியாகவும் நேர்த்தியாகவும் விண்ணபதாரியின் கையெழுத்தினாலேயே நிரப்பப்படல் வேண்டும். விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலர்களின் பெயர் பாடநெறியின் சகல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக அதுதொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். ஏதேனும் ஒரு வகையில் பாடநெறிக் காலத்தினுள் அதில் மாற்றமேற்படும் பட்சத்தில், அது பற்றி திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் எழுத்துமூலம் ஸ்ரீ ஜயவர்தன பர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

II விண்ணப்பம் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தினை ஒத்திராத விண்ணப்பங்களும், முழுமையாக தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்றதா என்பது பற்றி விண்ணப்பதாரி பரிசோதித்துப் பார்க்க வேண்டியள்ளதுடன், அவ் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

III. விண்ணப்பதாரி விண்ணப்பத்தின் வலதுபக்க மேல் மூலையில் தரப்பட்டுள்ள கூட்டினுள் தபால் முத்திரை ஒன்றில் அளவில் புகைப்படம் ஒன்றினை கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். அத்துடன், தபால் முத்திரை ஒன்றின் அளவிலான புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்துடன் ( ஒட்டிவிடாது) இணைத்து அனுப்புதல் வேண்டும்.

06. **பாடநெறிக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் :**

I. இப்பாடநெறியைத் தொடரவுள்ள அலுவலர்கள் ரூபா 17, 500.00 தொகையை மக்கள் வங்கி கங்கொடவில கிளையில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின் , பீடங்களுக்கான அபிவிருத்தி நிதிய நடமாடும் கணக்கு இல. 097100140002229 எனும் பெயருக்கு அலுவலர் பணியாற்றுகின்ற நிறுவனத்தின் மூலம் காசோலையாகவோ , வங்கி வரைவாகவோ, குறித்த விண்ணப்பதாரியினால் குறிப்பிட்ட தொகையை வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பிரிவிற்கு படநெறி ஒருங்கிணைப்பாளரினால் அறிவிக்கப்படும் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அதில் தாபன கட்டணங்கள் ,அச்சுக் கட்டணங்கள்,பரீட்சைக் கட்டணங்கள்,வளவாளர்களுக்கான கட்டணங்கள்,ஒருங்கிணைப்புக் கட்டணங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன.

ii. எவ்வாறாயினும் ஆரம்பத்தில் பாடநெறிக்கு உரிய பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அதன்பின்னரான தவணைகளில் அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றும் போது, ரூபா 1000 பரீட்சைக்கான பதிவுக் கட்டணமாகவும் , ரூபா 2000 பரீட்சைக் கட்டணமாகவும், செலுத்துதல் வேண்டும். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடாதிபதியின் ஆலோசனைக்கமைய அக் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.

iii. எச்சந்தர்ப்பத்திலும் இப்பாடநெறிக்காக அறவிடப்பட்ட தொகை மீளளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சை அல்லது பாடநெறி தொடர்பாகவோ வேறொரு அலுவலருக்கோ மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**பாடநெறியைத் தொடரவேண்டிய தேவைப்பாடு :**

07. i. இலங்கை தொழிநுட்ப சேவையில் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு ஐந்து (05) ஆண்டுகளை கடப்பதற்கு முன்னர் சகல அலுவலர்களும் இலங்கைத் தொழிநுட்ப சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான III ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ii. 2013.06.01 திகதியளவில் இலங்கைத் தொழிநுட்ப சேவையில் I ஆம் தரத்திற்கு பதவியுயர்தப்பட்டு ஐந்து (05) ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு III ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவைப் பாட்டிலிருந்து விலக்களிக்கப்படும்.

**குறிப்பு** : திணைக்களத் தலைவரினால் அந்தந்த அலுவலர்களின் சேவை மூப்பு மற்றும் 07. i, 07. ii ஆம் பந்திகளின் விடயங்கள் சம்பந்தமாக அவதானம் செலுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

08. **பாடநெறிக்குத் தெரிவு செய்யும் முறை**:

i. இலங்கைத் தொழிநுட்ப சேவையில் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள் அத் தரத்தில் அமர்த்தப்பட்ட சேவை மூப்பின் ஒழுங்குமுறைக்கமைய, பாடநெறி தொடர்பாக அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் போது முன்னுரிமையளிக்கப்படும்.

ii. இச்சந்தர்ப்பத்தில் மாத்திரம் வரையறுக்கப்பட்ட வகையில் I ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கு மேலதிகமாக II அம் தரத்துடைய இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினை சித்தியடையும் அலுவலர்களுக்கு திணைக்களத்தின் பரிந்துரையுடன் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

09. விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல அலுவலர்களும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் பேணப்பட்டு வருகின்ற தரவு முறைமையினுள் உள்வாங்கப்படுவதுடன், ஒரு முறையில் 200 பேர்களைக் கொண்ட இரு குழுக்களாக ஆண்டுக்கு 800 பேர் இப் பாடநெறியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்படும் அலுவலர்களுக்கு அது பற்றி அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரிகளுக்கு பல்கலைக்கழகத்தின் மூலம் மீண்டும் அறிவிப்பதற்கு கடப்பாடு இல்லை என்றவகையில் அது அலுவலர்களுக்கு உரித்தான ஒரு சந்தர்ப்பம் என்ற வகையில் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பாடநெறி தொடர்பான பாடத்திட்டம்**:

| தொடர் இல. | பாடத்திட்டம் | கிரடிட் எண்ணிக்கை | கிரடிட் மணி |
|---|---|---|---|
| 01. | அரசாங்க நிதி முகாமைத்துவம் | 02 | 30 |
| 02. | மனித வள முகாமைத்துவம் (மூலக்கோட்பாடு) | 02 | 30 |
| 03. | பிரச்சினை தீர்த்தல் முகாமைத்துவம் (நிறுவகத்தின் நோக்கங்கள், குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் போதான பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் கோட்பாடுகளின் நடைமுறைப்பயன்பாடு) | 02 | 30 |
| 04. | நிறுவன நடத்தை | 02 | 30 |
| 05. | செயற்திட்ட அறிக்கை தத்தமது தொழிற்துறை சம்பந்தமாக முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினை அல்லது தொழிற்துறை தொடர்பான ஆய்வுக் கட்டுரை | 02 | 30 |
| | | 10 | 150 |

11. இவ்வறிவித்தலின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத எவ்வித விடயம் சம்பந்தமாகவும பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2018.மாச்சு 14.

( வர்த்தமானி அறிவித்தலின் மாதிரி விண்ணப்பம் www. pubad.gov.lk இல் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| தபால் முத்திரை அளவிலான புகைப்படம் இங்கு ஒட்டவும் |

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2017**

**( முகாமைத்துவம் தொடர்பான மூன்றுமாத சான்றிதழ் பாடநெறி)**

01. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உதாரணம்: GUNAWARDHANA, M.G.B.S.K.

02 . (ஆ) முழுப் பெயர்:----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

03. (இ) முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
(சிங்களத்தில் /தமிழில்).-----.

02. தாங்கள் மாகாண அரசாங்க சேவை அல்லது எவ்வித அரசாங்க சேவைக்கு உட்படுத்துகின்றீர்கள் என்பது பற்றி உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக

| |
|---|
| |

(அரசாங்க சேவை-10/மேல்மாகாண அரசாங்க சேவை -01/மத்திய மாகாண அரசாங்க சேவை-02/தென்மாகாண அரசாங்க சேவை -03/வட மாகாண அரசாங்க சேவை 04/கிழக்கு மாகாண அரசாங்க சேவை 05/வடமேல்மாகாண அரசாங்க சேவை- 06/வடமத்திய மாகாணஅரசாங்க சேவை - 07/ ஊவா மாகாணஅரசாங்க சேவை 08/சப்பிரகமுவ மாகாணஅரசாங்க சேவை 09)

03 பதவிப் பெயர் ( ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்).-----.

04. தாங்கள் பணியாற்றுகின்ற உப திணைக்களம்/பிரிவு.----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்).-----.
(சிங்களத்தில் /தமிழில்).-----.

05. தாங்கள் பணியாற்றுகின்ற திணைக்களம்.----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்).-----.
(சிங்களத்தில் /தமிழில்).-----.

06. அரசாங்க முகவரி.----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்).-----.
(சிங்களத்தில் /தமிழில்).-----.

07. தனிப்பட்ட முகவரி.----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்).-----.
(சிங்களத்தில் /தமிழில்).-----.

08. மின்னஞ்சல்: ----.

09. தொலைபேசி இல.
தனிப்பட்ட ☐☐☐☐☐☐☐☐☐☐

அலுவலக ☐☐☐☐☐☐☐☐☐☐

10. பால்நிலை

ஆண் -M ☐
பெண்- F
*(குறித்த எழுத்தை கூட்டினுள் எழுதுக)*

11. (i) தேசிய ஆளடையாள அட்டை இல. ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
*(துங்களால் சத்தியபிரதியென உறுதிப்படுத்தப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் பிரதியொன்றை இணைக்கவும்)*
(ii) பிறந்த திகதி: ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

12. (அ) தாங்கள் இலங்கை தொழில்நுட்ப சேவையின் ஐ ஆம் தரத்துடையஅலுவலராயின்:

(i) தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி:

ஆண்டு: ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி: ☐☐

(ii) 2018.05.04 ஆந் திகதியன்று தரம் I இல் முனைப்புடனான சேவைக்காலம்:

வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

*(சான்றுப்படுத்திய பிரதியென அங்கீகார ஒப்பமிடப்பட்ட I ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை இணைக்கவும்)*

(iii) 2013.06.01 ஆந் திகதியில் I ஆம் தரத்தின் சேவைக்காலம் :

வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

ஆ) தாங்கள் இலங்கைத் தொழிநுட்ப சேவையில் II ஆம் தரத்துடைய அலுவலராயின்:

(i) தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி:

ஆண்டு: ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி: ☐☐

(ii) 2018.05.04 ஆந் திகதியன்று தரம் I இல் முனைப்படனான சேவைக்காலம்

வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

(iii) இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியெய்திய திகதி:----.

*(திணைக்களத் தலைவரினால் அலுவலருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் பெறுபேறு அட்டவணையினை தாமாக உண்மையான பிரதியென உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்)*

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் சரியானவை எனவும் மேலும், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பிரிவின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும்,தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கட்டுபடுவேன் எனவும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உறுதியுரைக்கின்றேன்.

................................ ........................................,
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

*கையொப்பத்தை உறுதிப்படுத்தல்*

*எனது அலுவலகத்தினால் திரு./திருமதி/செல்வி........................சேவையாற்றுகின்றார் எனவும், நான் அவரை தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், ................ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.*

...............................
*திகதி*

.......................................,
*கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.*

*திணைக்களத் தலைவரின் சான்றுரை*

*மேலே இல. 01 இல் இருந்து 12 வரையிலான பந்திகளில் அடங்கியுள்ள தகவல்கள் சரியானவை எனவும் 07 ஆம் பந்தியில் குறிப்புக்களுக்கு அமைய மற்றும் 08,09 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு கீழ்படிந்தும் அவ் விண்ணப்பதாரி இப் பாடநெறியில் கலந்து கொள்வதற்கு தகைமை பெற்ற இலங்கை தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த அலுவலர் எனவும்,உரிய பாடநெறிக் கட்டணம் திணைக்களத்தினால் செலுத்தப்படும் எனவும் உறுதியுரைக்கின்றேன்.*

...............................
*திகதி*

.......................................,
*திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.*

***சரி பார்க்கவும்:***

1. *தங்களால் உண்மைப் பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது* ☐
2. *முத்திரை அளவிளான புகைப்படப் பிரதி விண்ணபத்தின் வலது பக்க மேல் மூலையில் ஒட்டப்பட்டுள்ளது.* ☐
3. *முத்திரை அளவிளான புகைப்படப் பிரதி விண்ணபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.* ☐
4. *தம்மால் உண்மைப் பிரதியென சான்றுப்படுத்திய I ஆம் தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. அங்கீகார ஒப்பமிடப்பட்ட* ☐

*மற்றும்*

*தம்மால் உண்மைப் பிரதியென சான்றுப்படுத்திய திணைக்களத் தலைவரினால் அலுவலருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் பெறுபேற்று ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.* ☐

*3- 1341*